அசல்

21.2.1941. வி.ஸி. கோபலரத்னம்.

அசல் – 1 நகல் –

All Correspondence to
V. C. GOPALRATNAM
SECRETARY
GOLDEN JUBILEE

RES. 'PHONE: 8517.

'PHONE: 2458.

SUGUNA VILASA SABHA
14, MOUNT ROAD
MADRAS

ஸுகுண விலாஸ ஸபை
14. மவுண்ட் ரோடு
சென்னை.

வி.ஸி. கோபாலரத்னம்.
தங்க ஜூபிலி காரியதரிசி.

21. பிப்ரவரி. 1941.

# Golden Jubilee=1941

No. 72
21.12.70
Pages 222-23.
நாடகக்கட்டுரை.

ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி. டாக்டர். உ.வே. ஸ்வாமிநாத ஐயரவர்களுக்கு. தாஸன். வி.ஸி. கோபலரத்னம். அனேக நமஸ்காரங்கள் செய்து எழுதிக்கொள்வது:-

இவ்வருஷம். எங்கள் ஸுகுண விலாஸ ஸபைக்கு ஏற்பட்டு வருஷத்தில் 50-து ஆண்டு நிறைவு நடக்கப்போகிறது. அனேக வருஷங்களாய் தாங்கள் எங்கள் ஸபை விஷயத்தில் நிறைந்த அன்பும், சிரத்தையும் பாராட்டி வந்திருப்பதால், நடக்கப்போகும் சுபமான ஸந்தர்ப்பத்தில் தங்களைப் போன்ற பெரியோருடைய அனுக்ரஹமும், ஆசீர்வாதங்களும் இன்றியமையாதவை. எங்கள் ஸபை நாடகக் கலைக்கு தொண்டு செய்வதையே நோக்கமாகக் கொண்டு அத்துறையில் மாத்திரம் வருவது தாங்களறியாததல்ல. விழா கொண்டாடும் ஸமயத்தில் அதற்கு ஸம்பந்தப்பட்ட ஒரு புஸ்தகம் பிரசுரிக்க உத்தேசித்திருக்கிறோம். அந்த புஸ்தகத்தில். நமது தேசத்து நிபுணர்களிடமிருந்தும், கலைகளில் சிறந்த பெரியார்களிடமிருந்தும் கட்டுரைகள் யாசித்து பிரசுரம் செய்வதாய் ஏற்பாடு. ஆகையால், தாங்கள் தயவு செய்து நாடகக் கலைக்கு ஸம்பந்தப்பட்ட விஷயம் ஏதாவதொன்றைக் குறித்து ஒரு கட்டுரை எழுதி அனுப்பினால் எங்களுக்கு மிகவும் ஸந்தோஷமாயிருக்கும். கட்டுரை இந்த கடிதம் வரைந்துள்ள காகிதத்தைப் போல் மூன்று பக்கங்கள் அச்சிடக்கூடிய நீளமிருந்தால் போதும். வருகிற மார்ச்சு மாதம் முடிவுக்குள் எங்கள் கைக்கு வந்து சேர்ந்தால் ஸௌகரியமாயிருக்கும். தங்களுக்கு இந்த வயதில் சிரமம் கொடுக்கிறோமே யென்று வருத்தப்படுகிறோம். ஆயினும். தாங்கள் எங்கள் மீது வைத்துள்ள அன்பின் மிகுதியால் அந்த சிரமத்தை பாராட்டாமல், எங்களையும் மன்னித்து, எங்கள் வேண்டுகோளையும் பூர்த்தி செய்வீர்களென்று நம்புகிறோம். தயவு செய்து மேற்கண்ட விலாஸத்திற்கு ஒரு பதில் எழுதுமாறு பிரார்த்திக்கிறேன்.

அனேக நமஸ்காரங்கள்.

இப்படிக்கு தங்கள் வினயமான தாஸன்
வி.ஸி. கோபலரத்னம்.

அசல்

18

21.2.1941. வ.சி. கோபலரத்னம்.

அசல் – 1 நகல் –

Pages.
222-223.
தமிழ்க்
கருவூலம்.

No. 72.

அசல்

21.2.1941. உ.சி. கோபாலரத்னம்.

அசல் -1 நகல் -

No. 72
21.12.70
Page 222-23.

தமிழ்க் கருவூலம்.

21-2-41

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர். உ.வே. ஸ்வாமிநாத ஐயர் அவர்கள்.

தியாகராஜ விலாஸ்,

திருவேட்டீஸ்வரன்

பேட்டை

21.2.41

சென்னை.

SUGUNA VILASA SABHA
14, MOUNT ROAD, MADRAS

அசல்

21.2.1941.　உ.சி. கோபலரத்னம்.

அசல் –1　நகல் –

✓